முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1632

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.03.2024,** திங்கட்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரசனே
பிரணவ சித்தி மிகு அரங்கனே
சரணவச் சுடரேற்றி இந்த கலியுகத்தில்
சகலருக்கும் சற்குருவாய் விளங்கும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 05 ம் நாள், 18.03.2024, திங்கட்கிழமை)
வரமாக அரங்கன் உன்னுள் யானிருந்து
வையகத்தை வழி நடத்தி வருகின்றேன்
3. வருகவே அரங்கன் குடிலின் பெருமை
வருங்காலம் உலகமறியப்படும்
தர்மகுணம் நிறைந்த மக்களாக
தவராஜன் உன்னால்தான் உலகில் மக்கள் படை உருவாகும்
4. ஆகவே அறத்தைக் கொண்டு அகிலத்துக்கு
ஆன்மீக ஞானபலம் தருகின்ற ஒரே குரு ஆறுமுக அரங்கன் நீயப்பா
அப்பனே உன்னைக் கொண்டு இந்த உலகிலே
ஆறுமுகன் யான் ஞானசித்தர் காலத்தையும் ஞான ஆட்சிக்காலத்தையும்
5. ஆற்றல்பட ஆறுமுகன் யான் அரங்கேற்றுவேன்
அதற்கு அரங்கன் உன் தொண்டர் படைகளை
ஆன்மீக ஞானப்படைகளாக
அறமும் தர்மமும் தயவும் நிறைந்த
6. ஞானிகளாகவே அவர்கட்கு சக்தியூட்டி
அகிலத்தில் பெருமாற்றம் புரிவேன்
அன்னதனால் அரங்கன் தொடர்பு கொண்டு
அகிலத்தார் ஞானம் பயின்றால் போதும்

7. மண்ணுலகம் ஞான லோகமாகும்
மக்களுக்கெல்லாம் மகான்களாகும்
மகா சக்தி வரம் கிட்டி
மாற்றம் சடுதி இனிதே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—